DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.

**Case No.** **S.T.C.No. 725/2023**

Deposition of **PW– 1/ LW–1**

| | | |
|---|---|---|
| Name | : | வீரமுத்து |
| Father's Name | : | வீரசங்கிளி |
| Village | : | தேவாரம் |
| Taluk | : | உத்தமபாளையம் |
| Calling | : | முதல்நிலைக்காவலர் |
| Religion | : | இந்து |
| Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **27 day of March 2025.**
எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்சமயம் கோம்பை காவல்நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 01.07.2023 ம் தேதி போடி நகர் காவல்நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணியில் இருந்த போது போடி நகர் சார்பு ஆய்வாளர் திரு.அசோக் அவர்கள் முதல்நிலைக்காவலர் 990 பாலாஜி அவர்களுடன் போடி நகர் மதுவிலக்கு குற்ற தடுப்பு சம்மந்தமாக போடி குப்பிநாயக்கன்பட்டி அறிவுதிருக்கோவில் அருகில் காலை 6.00 மணிக்கு வாகன தணிக்கை செய்தோம். வாகனதணிக்கை செய்யும் போது பின்னர் பெயர் விலாசம் தெரிந்துக்கொண்ட தேவர் காலணியை சேர்ந்த நடராஜன் மகன் சுதாகர் என்பவர் TN 59 CA 5661 பஜாஜ் CT 100 வண்டியில் வரும் போது வாகனதணிக்கை செய்யவிடாமல் தடுத்தார். அப்போது நானும் என்னுடன் இருந்த பாலாஜி அவர்களும் வாகனத்தை மறித்து வாகனத்தை சோதனை செய்யும் போது வண்டியில் முன்னால் வைத்திருந்த பிளாஸ்டிக் சாக்கு பையில் 180 எம்எல் கொண்ட

எக்ஸ்பிரஸ் பிராந்தி பாட்டில் –4, ஓரியன் பிராந்தி பாட்டில் –1, மற்றும் 3 பிராந்தி பாட்டில்கள் மொத்தம் 8 பிராந்தி பாட்டில்களை சார்பு ஆய்வாளர் முன்னிலையில் 6.30 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினார் . அந்த அத்தாட்சியல் நானும் பாலாஜியும் சாட்சி கையொப்பம் செய்தோம் . அத்தாட்சியில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது . **அத்தாட்சியில் உள்ள 1 வது கையொப்பம் அசாஆ.1**.

பின்பு அவரை சார்பு ஆய்வாளர் கைதுக்கான காரணத்தை கூறி கைது செய்தார். எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளுடன் நிலையம் வந்தோம் . பின்பு போடி நகர் காவல்நிலைய குற்றஎண் . 262/2023 ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது . சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடைபெற்ற சமயத்தில் எனக்கு பணி ஒதுக்கீடு செய்தது யார் என்றால் சார்பு ஆய்வாளர். எனக்கு எத்தனை மணிக்கு பணி ஒதுக்கிடு செய்தார்கள் என்றால் முதல் நாள் காலை 8.00 மணி. என்னுடன் சேர்ந்து வேறு யார் யாருக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் பாலாஜி என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது . சம்பவ இடத்திலிருந்து அறிவுதிருக்கோவில் எவ்வளவு துாரத்தில் இருக்கும் என்றால் சுமார் 50 மீ துாரம் இருக்கும் . அறிவுதிருக்கோவில் நுழைவு வாயில் எந்த திசையை பார்த்து உள்ளது என்றால் வடக்கு பார்த்து உள்ளது . வாகனதணிக்கை செய்த இடம் ஜனநடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான் . அந்த பகுதியில் வீடுகள் அதிகமாக உள்ளது என்றால் சரிதான் . சம்பவ இடத்திற்கு வாகணதணிக்கை செய்ய எப்போது சென்றேன் என்றால் காலை 6.00 மணிக்கு. எனக்கு பணி ஒதுக்கீடு செய்தது எழுத்துமூலமான உத்தரவா என்றால் வாய்மொழி உத்தரவு . எதிரி ஓட்டி வந்த இருசக்கரவாகனம் என்ன கலர் என்றால் சரியாக ஞாபகம் இல்லை . வண்டியின் எண் மட்டும் ஞாபகம் உள்ளதா என்றால் உள்ளது. குறிப்பிட்டு அந்த வாகனத்தை அடையாளம் சொல்லமுடியுமா என்றால் எதிரி தொடர்ந்து இதேபோல் செய்து வந்தததாக தகவல் வந்ததால் வாகனதணிக்கைக்கு சென்றேன் . போடிநகர் காவல்நியைத்திலிருந்து வாகனதணிக்கை நடைபெற்ற இடம் எவ்வளவு துாரம் என்றால் சுமார் 2 கி.மீ. சார்பு ஆய்வாளர் அழைத்தன் பேரில் நானும் இன்னொரு காவலரும் சென்றோம் என்றால் சரிதான் . நாங்கள் 3 பேரும் தனிதனிவாகனத்தில் சென்றோமா என்றால் சார்பு ஆய்வாளர் ஒரு வாகனத்திலும் நானும்,

பாலாஜியும் மற்றொரு வாகனத்திலும் சென்றோம். எதிரி வாகணதணிக்கை நடைபெற்ற இடத்திற்கு எந்த நேரத்தில் வந்தார் என்றால் காலை 6.00 மணிக்கு. குறிப்பிடட்டு எதிரி பற்றி தகவல் கிடைத்ததால் சென்றோமா என்றால் பொதுவாகவே மதுவிலக்கு ரோந்து செல்வோம் . எதிரியை முதலில் தடுத்துநிறுத்தியது யார் என்றால் 3 பேரும் சேர்ந்துதடுத்துநிறுத்தினோம். எதிரி எந்த திசையிலிருந்து எந்த பக்கம் வ்நதார் என்றால் தெற்கிலிருந்துவடக்கு. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எதிரி வரவில்லை என்றும , நாங்கள் எதிரியை கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல . எதிரி மதுபாட்டில்களை சட்டவிரோதமாக எடுத்து செல்லவில்லை என்றும் , நாங்கள் கைப்பற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல .. காவல்துறையில் மதுவிலக்கு தனிப்பிரிவு உள்ளது என்றால் சரிதான் . சிறப்பு பிரிவு இருப்பதால் நாங்கள் அவர்களுக்கு தகவல் கொடுக்கவேண்டிய விதி உள்ளது என்றால் தெரியவில்லை. மதுவிலக்கு அமலாக்கபிரிவு இருக்கும் போது அவர்கள் தான் முறைப்படி மதுவிலக்கு குற்றங்களுக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் நாங்கள் எடுக்க இயலாது என்று சொன்னால் சரியல்ல . நான் சொன்னது போல் எந்த சம்பவம் நடைபெறாததால் தான் சிறப்பு பிரிவிற்கு தகவல் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல . மதுவிலக்கு சம்மந்தமாக வழக்கு பதிவு செய்ய மதுவிலக்கு அமல்பிரிவிலிருந்து எங்களுக்கு சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லியுள்ளார்கள். எதிரி குற்றமற்றவர் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Bodinayakanur.